



# Voice of Jagadguru



advaitam paramanandam

an e-magazine on advaita

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## அருள் மொழிகள்




உபநிஷத்துகளில் உள்ள அத்வைதத்தையே ஸ்ரீசங்கரரும் உபதேசித்தார். அவர் புது தத்துவம் எதையும் தோற்றுவிக்கவில்லை. இந்த தத்துவம் ஸ்ரீ கிருஷ்ணரால் பகவத் கீதையிலும் வேதவியாஸரால் ப்ரம்ஹஸூத்திரத்திலும் வெளிப்படுத்தப்பட்ட அத்வைத தத்வமே என்பது அறிஞர்களின் ஒருமித்த கருத்து. ஆகவே வித்வத்ஸ்வரூபியும் ப்ரேம ஸாகரமுமான ஸ்ரீ சங்கர பகவத்பாதரின் ஜன்மதினத்தை நாம் எல்லோரும் கொண்டாட வேண்டும்.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

## सुभाषितानि

## நல்லுரைகள்

धर्मो रक्षति रक्षितः । த⁴ர்மோ ரக்ஷதி ரக்ஷிதஃ = தர்மம் பேணி வளர்க்கப் பெறும்போது நம்மை அது பேணி வளர்க்கிறது.

तृप्तिस्तु परमं धनम् । த்ரு'ப்திஸ்து பரமம்' த⁴னம் = மன நிறைவு பெருஞ் செல்வம்.

अकस्मादेति तद्वित्तं याति चाकालमेघवत् । அகஸ்மாதே³தி தத்³வித்தம்' யாதி சாகாலமேக⁴வத் = திடீரெனக் குவியும் மேகம் போல், செல்வம் குவியும். அவ்வாறே விலகும்

Our Mail ID : Info@voiceofjagadguru.com

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## விதுர நீதி

चत्वारि कर्माण्यभयङ्कराणि भयं प्रयच्छन्त्य यथा कृतानि |
मानाग्निहोत्रमुत मानमौनं मानेनाधीतमुत मानयज्ञः ||

சத்வாரி கர்மாண்யப4யங்கராணி ப4யம்’ ப்ரயச்ச2ந்த்ய யதா2 க்ரு’தானி |
மாநாக்3னிஹோத்ரமுத மானமௌனம்’ மானேனாதீ4தமுத மானயஜ்ஞ: |



அக்னிஹோத்ரம், மௌனம், அத்யயனம், யக்ஞும் இந்த நான்கு கர்மாக்களும் அப'யத்தை அளிக்கக் கூடியன. அவைகள் வேறு விதமாக கௌரவத்திற்காகச் செய்யப்பட்டால் பயத்தை அளிக்கின்றன.

पञ्चाग्नयो मनुष्येण परिचर्याः प्रयत्नतः |
पितामाताऽग्निरात्मा च गुरुश्च, भरतर्षभ ।।

பஞ்சாக்3னயோ மனுஷ்யேண பரிசர்யா: ப்ரயத்னத: |
பிதாமாதா(அ)க்3நிராத்மா ச கு3ருஶ்ச, ப4ரதர்ஷப4 ..

தந்தை,தாய்,அக்னி, ஆத்மா, குரு, அக்னிக்கு ஒப்பான இவ்வைந்து பேர்களையும் மனிதன் முயற்சியுடன் ஆராதிக்க வேண்டும்.

पञ्चैव पूजयल्लोके यशः प्राप्नोति केवलम् |
देवान् पितृन् मनुष्यांश्च भिक्षून्यतिथिपञ्चमान् ।।

பஞ்சைவ பூஜயல்லோகே யஶ: ப்ராப்னோதி கேவலம் |
தே3வான் பித்ரு’ன் மனுஷ்யாம்’ஶ்ச பி4க்ஷூன்யதிதி2பஞ்சமான் ..

உலகில் தேவர்கள், பித்ருக்கள், மனுஷ்யர்கள், யதி'கள் அதி 'திகள் , ஆகிய இந்த ஐந்து வகையார்களையும் பூஜிப்பவன் இவ்வுலகில் மிகப் புகழை அடைவான்.

पञ्च त्वानुगमिष्यन्ति यत्र यन्त्र गमिष्यसि |
मित्राण्यमित्रः मध्यस्था उपजीव्योप जीविनः ||

பஞ்ச த்வானுக3மிஷ்யந்தி யத்ர யந்த்ர க3மிஷ்யஸி |
மித்ராண்யமித்ர: மத்4யஸ்தா2 உபஜீவ்யோப ஜீவின: ||

ஓ அரசனே! எங்கு தாங்கள் சென்றாலும் இவ்வைந்து பேர்களும் தங்களைத் தொடர்ந்து இருக்கவேண்டும். ஸ்னேஹிதர், சத்ருக்கள். மத்யஸ்தர்கள் (நடுநிலைமை வஹிக்கிறவர்கள்), நாம் ஆஸ்ரயிக்க வேண்டிய பெரியோர்கள், நம்மை அண்டி பிழைப்பவர்கள், இவர்களாகும். (குறிப்பு) எதிர் கக்ஷிக்காரர்கள் அரசனிடமுள்ள தவறுகளை தைர்யமாக கூறுவார்கள். நடுநிலைமை வஹிக்கிறவர்கள் அவர்கள் சொன்ன தவறை திருத்திக்கொள் எனக் கூறுவார்கள்.

(தொடரும்….)

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஆசார்யாளின் உபதேசங்கள்

(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)

# திருப்தி உடையவனே பாக்கியசாலி

பழங்காலத்தில் வாழ்ந்த ரிஷிகளையே எடுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் ஆசைகள் இல்லாதவர்களாய், எப்போதும் திருப்தியடைந்தவர்களாய் வாழ்ந்து வந்தனர். அவர்களிடம் செல்வம் இல்லாவிட்டாலும் அவர்கள் தங்களை தரித்ரர்களாகக் கருதவில்லை. ஆனால், இதற்கு மாறாக இப்போதோ, செல்வம் உள்ளவர்கள்கூட தங்களை தரித்ரர்கள் என்று எண்ணிக் கொள்கிறார்கள். இந்த வேறுபாட்டுக்கு என்ன காரணம்? ரிஷிகள் எந்த விதமான ஆசைகளும் இல்லாதவர்களாக இருந்தனர். ஆனால், நம் மனதிலோ எண்ணற்ற ஆசைகள் உள்ளன. ஆகவே தாரித்ர்யம் என்னும் எண்ணத்திலிருந்து விடுபட நாம் மனதிலுள்ள ஆசைகளை அடியோடு அகற்றிவிட வேண்டும். ஆசைகளை அடியோடு அகற்ற வேண்டும் என்று சொல்வது ஒரு விஷயம். அவற்றை உண்மையிலேயே அகற்றி விடுவது இன்னொரு விஷயம். ஆசைகளை ஒழிக்க நிறைய வழிகள் இருக்கின்றன.



அத்தகைய பல வழிகளை சாஸ்திரங்கள் உபதேசித்தாலும் அவற்றை ஏற்றுக் கொள்வதோ விலக்கித் தள்ளுவதோ நம் கையில்தானிருக்கிறது. பசியெடுத்தவன் உணவை உண்ண வேண்டும். அதுதான் பசியைப் போக்கிக்கொள்வதற்குண்டான வழியாகும். சாப்பாடு பறிமாறப்பட்டபின் சாப்பிடுவதோ, விட்டுவிடுவதோ நம் கையில்தானிருக்கிறது. அதைப்போல்தான் இங்கும். பொருட்கள் விஷயத்தில் வைராக்கியத்தை ஏற்படுத்திக் கொள்வதே, அவை மீதுள்ள பற்றைப் போக்க வழியாகும். வெவ்வேறு மக்கள் வெவ்வேறு பொருட்களை விரும்பவோ வெறுக்கவோ செய்கிறார்கள். சினிமாவிற்குப் போவது சிலருக்கு விருப்பமில்லை. அவர்களை இதற்கான காரணம் கேட்டால், "சினிமாவுக்குச் செல்வதால் என்ன பிரயோஜனம்? அங்கு செல்வது வீண்" என்பார்கள். சிலருக்கு ஆலயங்களுக்குச் செல்வது போன்ற செயல்களில் விருப்பமில்லை. ஏன் என்று கேட்டால், "கோவிலுக்குப் போவது வீண் ஐயா" என்று விளக்குவார்கள். நாம் வெறுக்கின்ற பொருட்களோ செயல்களோ வெவ்வேறாக இருப்பினும்,

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

"பயனில்லை" என்று நாம் பார்ப்பதனால், வெறுக்கப்படுவதற்கான காரணம் மட்டும் ஒன்றாகவே இருக்கிறது. ஆகவே, ஏதாவது ஒரு விஷயத்தில் ஒருவனுக்கிருக்கும் ஆசையை அவன் போக்கிக்கொள்ள வேண்டுமானால், அவன் அவ்விஷயத்தில் "இதனால் எனக்குப் பயனில்லை" என்ற பாவனையை வளர்த்துக் கொள்ள வேண்டும். அத்தகைய பாவனை இருந்து விட்டால், ஒரு விஷயத்தில் விருப்பமின்மை என்பது தானாகவே ஏற்பட்டுவிடும்.

இங்கு ஒரு கேள்வி எழலாம். பயன் இருக்கக்கூடிய ஒரு விஷயத்தை பயனற்றது அல்லது வீண் என்று எவ்வாறு கூற முடியும்? இதற்குப் பதில் இதுதான் - பயன் தருவது, பயனற்றது போன்ற குணங்கள் இயற்கையாகவே எந்தப் பொருளிலும் அமைந்திருப்பதில்லை. அவை, அவ்விஷயத்தைப் பார்ப்பவனுடைய கருத்துக்களாகவே இருக்கின்றன. உதாரணத்திற்கு, இனிப்புப் பக்ஷணங்கள் சிலருக்கு மிகவும் பிடிக்கும். சர்க்கரை வியாதிக்காரர்கள் இனிப்பு வகைகள் கூடவே கூடாது என்று ஒதுக்கித் தள்ளுகிறார்கள். ஆகவே விரும்பத்தக்கவை வெறுக்கத்தக்கவை என்ற குணங்கள் இனிப்பு வகைகளில் இயற்கையாக இருப்பதில்லை. விருப்பும் விருப்பமின்மையும் ஜனங்கள் சம்பந்தப்பட்டவை. அப்படி யிருக்கையில், இப்போது நாம் விரும்பத்தக்கது, பயனுள்ளது என்று கருதும் ஒரு பொருளை ஸாரமற்றது, பிரயோஜனமில்லாதது என்று பார்ப்பதில் எவ்விதத் தவறுமில்லை. அவ்வாறு கருதினால் நமக்கு மனவமைதி கிடைக்கும். ஏனென்றால், நாம் விரும்பும் பொருள் நமக்குக் கிடைக்காமல் போகலாம் என்று ஆகிவிட்டால் வருத்தம் அடைகிறோம். அதேபோல் கிடைத்த பொருள் நம்மைப் பிரிய நேரிடலாம் என்ற நிலை குறித்தும் வருத்தமடைகிறோம். உதாரணத்திற்கு, செல்வத்தை ஈட்டுவதில் எவ்வளவு கஷ்டம் உள்ளது என்பது எல்லோருக்கும் தெரியும். அதேபோல், சம்பாதித்த செல்வமும் நம் கவலைக்குக் காரணமாக இருக்கிறது. ஏனென்றால், திருட்டு, வரி போன்றவற்றால் அது நம்மைவிட்டுப் பிரிந்துவிடுமோ என்னும் கவலை. இதையெல்லாம் தெரிந்துகொண்டும் ஒருவன் விஷயங்களின் மீது உள்ள பற்றைப் போக்கிக்கொள்ளாமல் இருந்தால் அவனை என்ன சொல்வது? ஒருவனுக்குத் தெரியாத விஷயத்தைச் சுலபமாக அவனுக்குத் தெரியப்படுத்தலாம். ஆனால், ஒருவன் வேண்டுமென்றே தனக்குத் தெரியும் விஷயத்தை லட்சியம் செய்வதில்லை என்றால் அந்த நிலையே வேறு. பிராயச்சித்தங்கள் பல சொல்லப்பட்டிருக்கின்றன. எதற்காக? அறியாமல் செய்யும் தவறுகளுக்காக. வேண்டுமென்றே மீண்டும் மீண்டும் செய்யும் தவறுகளுக்கு என்ன பிராயச்சித்தம் சொல்ல முடியும்?

ப்ராயச்சித்தம் ஸக்ருதுபனதே வா ப்ரமாதாத்க்ருதே வா |
பூயோ பூயோப்யவஹிததரை: ஸாதிதே க: ஸமாதி: ||

(தொடரும் …..)

ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸ்ரீ ஸூக்தம்

6. சூரியனின் நிறத்தவளே ! காட்டிற்குத்தலைவனாகிய வில்வ மரம் உன் தவத்தால் உண்டாயிற்று. அதன் பழங்கள் அறியாமையாகிய அகத் தடையையும், அமங்கலமாகிய புறத் தடையையும் உன் தவத்தாலேயே அழிக்கட்டும்!





7. குபேரனும், புகழின் தேவனும் செல்வங்களுடன் என்னை நாடி வர வேண்டும். உன் அருள் நிறைந்த இந்த நாட்டில் பிறந்திருக்கிறேன். எனக்குப் பெருமையும் செல்வமும் தருவாய்!

8. பசி தாகத்தினால் மெலிந்தவளும், ஸ்ரீதேவிக்கு முன்னாள் பிறந்தவளுமான மூதேவியை நான் விலக்குகிறேன். என் வீட்டிலிருந்து எல்லா ஏழ்மையையும் வறுமையையும் அகற்றி அருள்வாய்!

9. நறுமணத்தின் இருப்பிடமானவளும், வெல்லப்பட முடியாதவளும் என்றும் வலிமையைத் தருபவளும், எல்லாம் நிறைந்தவளும்; எல்லா உயிர்களின் தலைவியுமான அந்த மகாலட்சுமியை இங்கே பிரார்த்திக்கிறேன்.

10. திருமகளே, மனத்தில் எழுகின்ற நல்ல ஆசைகளையும், மகிழ்ச்சியையும், வாக்கில் உண்மையையும், பசுக்களில் நிறைவால் மற்றும் உணவின் நிறைவால் ஏற்படுகின்ற இன்பத்தையும் நான் அனுபவிக்க வேண்டும். எனக்கு கீர்த்தி உண்டாகட்டும்!

(தொடரும்...)


Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita


ஸத் ஸம்ப்ரதாயம்
An Unit of the e magazine Voice of Jagadguru)

## என்றும் புதியவர்

### ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

## 1. பகுத்தறிவு (விவேகம்)

பிரம்ம ஞானமே முழுமையான விவேகம்

"... தெளிவான - ஐயமற்ற, முரண்பாடில்லாத; ஞானம் - வேதம் மற்றும் குருவின் அருளினால் உதித்த மஹாவாக்கியப் பொருளின் அனுபவம்; அதனின்று பிறந்த முழுமையான விவேகம் 'பிரம்மம் ஸத்யம்; பிரபஞ்சம் தவறான தோற்றம்' என்ற இயல்பை உடையது ..."



இங்கே ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள் புனைந்த நாமாவளியை நினைவுக்குக் கொணர்வோம். அதில் ஒரு நாமாவில் அவர் ஆசார்- பாலனா, "महावाक्यविवेकज्ञः" என்று போற்றுகிறார். மேலே நாம் பார்த்த உரையிலிருந்து இதற்கு “மஹாவாக்கியத்தின் பொருளின் அனுபவத்தால் அமையும் முழுமையான விவேகத்தை அறிந்தவர்” என்ற சிறப்பான பொருள் தெரிகிறது. இப்படிப்பட்ட முழுமையான விவேகமுள்ள ஞானி எப்படி இருப்பார் என்பதை அறிவதற்கு ஆசார்யாளின் வாழ்க்கையே சிறந்த உதாரணமாக அமைகிறது. இது பற்றி இக்கட்டுரையில் எஞ்சியுள்ள பகுதிகளிலும், விசேஷமாக "மஹாப்ரக்ஞை” என்ற சொல்லிற்குப் பொருள் கூறும்பொழுதும் பேசவுள்ளோம்.

### 2. பேரறிவு (மஹாப்ரக்ஞை)

முந்தைய இயலில் “விவேகம்” என்ற சொல் ஆசார்யாளை எவ்வெந்த விதங்களில் குறிக்கிறது என்பதை ஆராய்ந்தோம். இனி இந்த இயலில், நாம் எடுத்துக் கொண்ட சுலோகத்தில் அடுத்து வரும் "மஹாப்ரக்ஞை” என்கிற சொல்லைப் பார்ப்போம். அதற்கு முன்னோடியாக சிருங்கேரிக் காட்சிகள் நான்கைக் கீழே பதிவு செய்வோம்:

... 1976ம் ஆண்டு மே மாதம், ஒரு நாள் பிற்பகல், ஸச்சிதானந்த விலாஸத்திலிருந்து ஸ்ரீமத் சந்த்ரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் மற்றும் ஸ்ரீமத் ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹபாரதீ மஹாஸ்வாமிகளின் அதிஷ்டானங்களை நோக்கி நான் நடந்து செல்லும் போது, ஆசார்யாள் அந்த அதிஷ்டானங்களுக்கு முன் உள்ள தோட்டத்தில் தனியாக வேலை செய்வதை வியப்புடன் பார்த்தேன். அவர் கையுறைகள் அணிந்திருந்தார்; அவர் கையில் ஒரு

தோட்டக் கத்திரி இருந்தது; அருகில் ஒரு கத்தியும், வாளியில் நீரும், வார்ப்பட்டையும் பார்த்தேன். ஆசார்யாள் நான் அருகில் இருப்பதைக் கவனித்துத் வருமாறு சைகை செய்தார். ரோஜாச் செடி ஒன்றில் ஒட்டுக் கிளை வைக்கவிருப்பதாகவும், அதற்கு அவர் “T-BUD” என்ற நடைமுறை ஒன்றைப் பின்பற்றப் போவதாகவும் கூறினார்.... அவ்வாறு செய்யும் போது, அவர் அந்த நடைமுறையையும் படிப்படியாக எனக்கு விளக்கினார்... விரைவாகவும் அதே சமயம் மென்னயமாகவும் செயலாற்றினார்; அந்த வேலை விரைவில் முடிந்தது."

“... சிருங்கேரியில் அச்சமயம் அவ்வளவு கூட்டம் இல்லை. அப்பொழுது சிருங்கேரிக்கு வந்திருந்தவர்களில் ஒரு இளம் பிரம்மசாரியைக் கவனித்தேன். யாருடனும் பேசமாட்டான், பூஜை சமயத்தில் தனியாகவும் எவரது பார்வையை மறைக்காதவாறும் அமர்வான்; ஆசார்யாளிடம் தீர்த்தம் பெறும் சமயத்தில், மிகப் பொறுமையாக வாங்கிக் கொள்வான். விசாரித்ததில், அவன் இந்திய அறிவியல் கழகத்தில் முதுகலைப் படிப்பு படித்து வருவதாகவும், சிருங்கேரிக்கு முதல் தடவையாக வந்திருக்கிறான் என்பதையும் அறிந்தேன். ஒரு நாள் காலை, பாத பூஜை எதுவும் இல்லையென்றும் ஆசார்யாள் தீர்த்தம் மட்டும் வழங்குவார் என்றும் அறிவிக்கப்பட்டது. எல்லோரும் ஆசார்யாளுக்காகக் காத்திருந்தோம் ... ஆசார்யாள் அங்கு வந்தவுடன் அந்த இளம் பிரம்மசாரியைப் பார்த்து கன்னடத்தில், “ஓ! நீ வந்திருக்கிறாயா? இங்கே வா, இதை வாங்கிக் கொள்” என்று அவனைத் தம்மருகில் வருமாறு பணித்தார். அவன் ஆசார்யாள் அருகில் சென்று இரு கைகளையும் நீட்டினான். ஆசார்யாளும் அவர் உள்ளங்கையில் உள்ள பொருள் ஒன்றை அவனுக்குக் கொடுத்தார். அவனும் அதை வாங்கித் தன் கண்களில் ஒற்றிக் கொண்டான். அச்சமயம், ஸச்சிதானந்த விலாஸத்தின் வாசலில் ஒரு கார் வண்டி வந்து நின்றது. அதிலிருந்து மேலை நாட்டவர் ஒருவர் இறங்கினார். ஆசார்யாளைப் பார்ப்பதற்கு உள்ளே வந்து இரு கரம் கூப்பி நின்றார். ஆசார்யாள் அவரைக் கண்டவுடன் ஹிந்தியில் , लेगेट ! आओ! आओ! என்று உற்சங்கத்துடன் வரவேற்றார். வந்தவர் மலர்ந்த முகத்துடன் ஆசார்யாளை வணங்கினார். அதன் பின், ஆசார்யாள் . அந்த மேனாட்டவருடன் தம் அறைக்குச் சென்றுவிட்டார். என் அருகே நின்ற இளம் பிரம்மசாரி நான் எல்லாவற்றையும் கவனிப்பதைப் பார்த்து என்னிடம், “நேற்று ஆசார்யாள் என்னிடம் நான் சிருங்கேரிக்கு வந்தததற்குக் குறிப்பான காரணம் ஏதாவது உண்டா என்று கேட்டார். பூஜை செய்வதற்கு ஒரு சாளக்ராமம் வேண்டும் என்று ஆசார்யாளிடம் வேண்டினேன். என் விருப்பத்தை ஆசார்யாள் இன்று நிறைவேற்றிவிட்டார்” என்று கூறித் தன் கையில் உள்ள சாளக்ராமத்தை என்னிடம் காட்டினான். அதில் புதிதாக சந்தனம் இடப்பட்டிருந்தது. அதிலிருந்து, ஆசார்யாள் முதலில் அதற்குப் பூஜை செய்திருக்க வேண்டும் என்று ஊகித்தேன்..." (தொடரும்.....) மிக்க நன்றி : Centre for Brahmavidya

ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## நீதி மஞ்ஜரீ

ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

### அத்யாயம் 4
### ஆசாரம்

ஆசாரம்தான் தர்மானுஷ்டானத்திற்கு அடிப்படை ஆசாரமாகிற வேர் இல்லாதபோனால் தர்மமாகிற விருக்ஷம் ஏற்படாது. மேன்மேலும் தர்மத்தை அனுஷ்டித்து சிரேயஸ்ஸை அடையவேண்டுமானால் அஸ்திவாரமாகிய ஆசாரம் திருடமாயிருக்க வேண்டும். ஒரு கொத்தனைக் கூப்பிட்டு மாடி வைத்து அழகாக ஒரு வீடு கட்டிக்கொடு என்றால் அவன் உடனே மாடியைக் கட்ட ஆரம்பிக்க முடியாது. தளத்திற்குக கீழே பறித்து பள்ளம் தோண்டுவான். மேலே வீடு கட்டவேண்டியிருக்க கீழே தோண்டுவது அனாவசியமாகவும் அசட்டுத்தனமாகவும் தோன்றலாம். ஆனால் அவ்விதம் எவ்வளவுக்கெவ்வளவு பள்ளம் தோண்டி அஸ்திவாரம் போடுகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு கட்டிடம் கெட்டியாக நிற்கும். பள்ளம் நன்றாகத்தோண்டி அதில் கல், செங்கல்துண்டு. சுண்ணாம்பு, கப்பி எல்லாம் போட்டு நன்றாகக் கெட்டிக்க வேண்டும். காசு கொடுத்து வாங்கின இந்த சாமான்களை பூமிக்குள் போட்டு எதற்காக புதைப்பது என்று நினைத்தால் கட்டிடம் கட்டமுடியாது; கட்டினாலும் நிற்காது. அதேமாதிரி ஆசாரம் என்பது மிகவும் கீழ்ப்பட்டதாகத் தோன்றலாம். இதனால் என்ன பிரயோஜனம், இது இல்லாவிட்டால் என்ன வந்துவிடும் என்ற உதாஸீன புத்தி இக்காலத்திலுள்ளவர்களுக்கு ஜாஸ்தியாக இருந்து கொண்டு வருகிறது . ஆசாரத்தின் தன்மையையே தெரிந்து கொள்ளாததுதான் இம்மாதிரி எண்ணங்களுக்குக் காரணம். ஆசாரத்தில் அலக்ஷ்யபுத்தி ஏற்பட்டால் தர்மசிரத்தை குறைந்திருக்கிறதென்பது நிச்சயம். அஸ்திவாரம் தளர்ந்தால் வீட்டுச்சுவரில் பிளப்பு ஏற்படும்; வீடு ஆட்டம் கொடுக்கும்: நன்றாகத் தளர்ந்துவிட்டால் வீடே கீழே விழுந்துவிடும். ஆசாரத்தை விட்டுவிட்டு தர்மானுஷ்டானம் செய்வதாகச் சொல்லிக் கொள்கிறவர்களின் கதியும் இப்படித்தான். அவர்கள் கடைசியில் அதர்மத்திலேயே இறங்கி விடுவார்கள். ஆனால் ராஜஸ, தாமஸ விருத்திகள் மேலிட்டிருக்குமாதலால், தான் செய்வதே தர்மம் என்று சாதிப்பார்கள்; பலமும் செல்வாக்கும் இருந்துவிட்டால், மற்றவர்களையும் அதர்மவழியில் இழுத்துக்கெடுக்க முயற்சி செய்வார்கள். ஆஸ்திகராயிருப்பவர் நாஸ்திகராக மாறுவதின் முதல் அறிகுறி ஆசாரத்தைக் கைவிடல்: அப்படியே நாஸ்திகராக இருப்பவர் தார்மிகராக மாறுவதின் முதல் அறிகுறி ஆசாரத்தைக் கைப்பற்றல்.


## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஆசாரம் என்ற சப்தத்திற்கு நடத்தை அதாவது நன்னடத்தை என்றே அர்த்தம். நடத்தை மூவகைப்படும்: காயிகம், வாசிகம், மானஸிகம் என்று. ஸத்யமாய், ஹிதமாய், மிதமாய் பேசுவது வாசிக ஆசாரமாகும். ராகத்வேஷமின்றி சாந்தியுடனிருப்பது மானஸிக ஆசாரமாகும். இவைகளைப்பற்றி இங்கு விஸ்தரிக்க உத்தேசமில்லை. காயிக ஆசாரத்தைப்பற்றி மாத்திரம் கவனிப்போம். காயிகம் என்றால் சரீரத்தை ஸம்பந்தித்தது என்பது அர்த்தம். சரீர ஸம்பந்தமான ஆசாரம் எதுவெல்லாம் என்றால், சரீரம் எத்தகையது என்று தீர்மானித்து கொண்டால் தான் சொல்ல முடியும். நான் மனுஷ்யன், நான் ஹிந்து, நான் பிராஹ்மணன், நான் கிரஹஸ்தன், நான் தகப்பன்.


நான் பர்த்தா, நான் இக்குலத்தில் பிறந்தவன், நான் இத்தேசத்தவன் முதலான எண்ணங்கள் யாவற்றும் சரீரத்தை ஒட்டினவையேயாகும். ஆகையால் ஆசாரம் என்பது மனுஷ்யனை மிருகத்திலிருந்தும், ஹிந்துவை இதர மனுஷ்யர்களிலிருந்தும், பிராஹ்மணனை இதர ஜாதியார்களிலிருந்தும், கிரஹஸ்தனை இதர ஆஸ்ரமிகளிலிருந்தும் மற்றும் வகையிலும் ஒருவனை மற்றவர்களிடமிருந்து பிரித்துக் காட்ட உதவும். பிரதி மனுஷ்யனிடத்திலும் பிரதி குடும்பத்திலும் பிரதி ஜன ஸமூஹத்திலும் வேற்றுமை வெகு ஜாஸ்தியாகவே தாண்டவமாடிக்கொண்டிருக்கும். இக்காலத்தில் வேற்றுமை கூடாதென்ற பிரசாரம் செய்து வருவது சாஸ்திரிய வேற்றுமையை மாத்திரம் குறைக்க உதவுகிறது. ஜகத்தில் வேற்றுமையில்லையானால் ஜகத்தே நிற்காது என்பதை மறந்து இதுமாதிரி பிரசாரம் செய்து ஜனங்களைக் கெடுக்கிறார்களே தவிர, வேற்றுமையை அழித்துவிட யாராலும் முடியாது என்பதுதான் தத்வம் என்பதை உணர்கிறார்களில்லை. வேர், தூர், அடிமரம், கிளை, இலை, பூ, காய், கனி என்றிருந்தால் தான் மரம் என்றாகும். இவ்வேற்றுமை போய் ஒன்றாக ஆகிவிட்டால் கட்டை, கரி என்றேதான் அந்தஸ்தைக் காட்டுகிறது. கொஞ்ச நாளாக விவாஹம் என்பதும் மிருச்சாயையாகவே மாறிவருகிறது. இப்படி தம் ஆசாரங்களை கைவிட்டு வத்தோமேயானால் இந்த ஜன்மத்தில் மிருக துல்யமாக ஆகிவிடுகிறோம் என்பது மாத்திரமில்லை. மனுஷ்வத் தன்மையை விட்டு மிருகத்தின் போக்கை கைக்கொண்ட தமக்கு அடுத்த ஜன்மத்தில் மிருகத்தன்மையையே பகவான் கொடுத்துவிடுவன் என்பதில் ஸந்தேஹமில்லை.

(தொடரும் ...) மிக்க நன்றி : ஸ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸ்ரீமத் வால்மீகி ராமாயண மாஹாத்ம்யம்

## (வால்மீகி ராமாயணத்தின் சிறப்பு)

(ஸ்ரீ ஸ்கந்தபுராணம் உத்தரகண்டத்தில் நாரதர்-ஸநத்குமாரரிடையே நடந்த உரையாடல்)

### அத்தியாயம் : ஐந்து

### இராமாயணத்தை ஒன்பது நாட்கள் கேட்கும் விதிமுறை: மகிமை மற்றும் பலன்களின் விவரம்

நாள்தோறும் இராமாயணத்தைப் படித்தல், கேட்டல் செய்பவன்; கங்கையில் நீராடுவதை உறுதியாகக் கடைப்பிடிப்பவன்: அறநெறிகளை எடுத்துக் கூறுபவன் - ஆகிய இவர்கள் சம்சாரக் கடலைக் கடந்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. மகாத்மாக்களே! துறவிகள், பிரம்மசாரிகள், வீரர்கள்கூட, இராமாயணத்தை ஒன்பது நாட்களுக்கு கேட்க வேண்டும். மிகுந்த பக்தியுடன் இராம கதையைக் கேட்பவன் ஞானவொளி பெற்று, பிரும்மலோகம் சென்று அங்கே பரமானந்தத்தில் திளைத்திருப்பான் . ஆகவே, அந்தணோத்தமர்களே! இராமாயண கதையைக் கேளுங்கள். தெய்வீகக் கதைகளைக் கேட்க விரும்புவர்களால் கேட்கத் தகுந்த மிகச்சிறந்த கதை இதுவே. இதைக் காட்டிலும் புனிதமானது வேறொன்றுமில்லை.

தீய கனவுகளைப் போக்கும் இந்தக் கதை மிகவும் போற்றுதலுக்குரியது. எனவே, மன ஒருமைப்பாட்டுடன் கேட்கத்தக்கது. மிகவும் ஈடுபாட்டுடன் இந்தக் கதையின் ஒரு சுலோகம் அல்லது ஒரு வரியையாவது படிப்பவன், கோடிக்கணக்கான உபபாதகங்கள் செய்ததன் விளைவான பாவங்களிலிருந்து விடுபடுகிறான். இது ரகசியங்களுள் ரகசியமானது ஆனதால் நன்மக்களுக்கே சொல்லப்பட வேண்டும். ஸ்ரீராமனுடைய திருக்கோயில், புண்ணியத்தலம், அல்லது, அடியார் திருக்கூட்டத்தில் இந்தக் கதை சொல்லப்பட வேண்டும். அந்தணர்களை வெறுப்பவன், வெளிவேஷக்காரன். மக்களை ஏமாற்றும் தொழிலில் ஈடுபட்டவன் ஆகியோருக்கு இந்தக் கதையை சொல்லக்கூடாது.

காமம் முதலிய மனமாசுகள் நீங்கப் பெற்றவர்கள்; இராமபக்தியில் திளைப்பவர்கள்: ஆசார்யர்களிடத்தில் பக்தியுடையவர்கள் ஆகியவர்களுக்கு முக்திக்கு வழிகாட்டும் இந்தக் கதையைச் சொல்ல வேண்டும். இராமன், அனைத்துத் தெய்வங்களின் உருவம்; மனமுருகிப் பிரார்த்திப்பவர்களின் துன்பங்களைப் போக்குபவன்; பக்திப் பண்பாளர்களிடம் பேரன்பு பூண்டவன். இராமதேவன், பக்தியினால் மகிழ்ச்சி அடைகிறான் வேறு எந்த வகையாலும் அல்ல. மனிதன், தன்னிச்சையாக (மனம் ஒட்டாமலே) எந்தப் பெயரை (இராம நாமத்தை) உச்சரிக்கிறானோ, அல்லது, நினைத்துக் கொள்கிறானோ அவனும்கூட பரமபதத்தை அடைகிறான்.

மகாத்மாக்கள்! சம்சாரம் என்னும் பயங்கரமான உட்புக முடியாதபடி அடர்த்தியான காட்டிற்கு (அதைப் பொசுக்கிச் சாம்பலாக்கும்] பிரளயாக்னி போன்றவன், மதுசூதனனான இராமன் அவன் திருநாமத்தை நினைத்துக்

கொள்பவர்களின் எல்லாப் பாவங்களையும் உடனே அழித்து விடுகிறான். இராமாயணத்தால் சுட்டிக்காட்டப்படும் பொருள், இராமனே ஈடு-இணையில்லாததும் புண்ணியமானதுமான இந்தக் காவியத்தைக் கேட்டாலும், படித்தாலும் எல்லாப் பாவங்களையும் போக்கவல்லது.

எவனுக்கு இராம நாம ரஸத்தில், பக்திபூர்வமான மனமகிழ்ச்சி ஏற்படுகிறதோ. அவனே இவ்வுலகக் கடமைகளைக் குறைவறச் செய்து முடித்தவன்; எல்லா அறநூல்களையும் கற்றுணர்ந்த மேதாவி. வேதியர்களே அவனால் செய்து முடிக்கப்பட்ட தவம் (இராம வேள்வி) புண்ணியமானது.



சத்தியமானது. உரிய நற்பலனைத் தருவது இராமபக்தியுடன் இராம கதையைக் கேட்பதால் ஏற்படும் மனநிறைவு, வேறு எதனாலும் கிடைப்பதில்லை.

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

மறைவல்லுநர்களே! பயங்கரமான கலியுகத்தில், இராமாயணத்திலேயே ஊறித் திளைத்திருப்பவர்கள், இராம நாமத்தில் ஆழ்ந்திருப்பவர்கள் கடமைகளை நிறைவேற்றியவர்களாவார்கள். இவர்களே, வாழ்க்கைக் கடமைகளை நிறைவேற்றியவர்களாவார்கள் .

இராமாயணம் என்ற அமுதப்பொழிவை ஒன்பது நாட்களுக்குக் கேட்க வேண்டும். அவ்வாறு கேட்பவர்களே நல்வழிப்பட்டவர்கள்; மகாத்மாக்கள், அவர்களை எப்போதும் நான் வணங்குகிறேன். பரமபுருஷனான ஸ்ரீராமனுடைய திருநாமம் மட்டுமே என் உயிர்மூச்சு. கலியுகத்தில்,ஒரு ஜீவன் நற்கதியடைவதற்கு (இராம நாமத்தைத் தவிர) வேறு வழியேயில்லை.

ஸூதர் கூறுகிறார் - மகாத்மாவான நாரதரால் இவ்வாறு உபதேசிக்கப்பட்ட சனத்குமாரர், தெள்ளிய ஞானம் பெற்று, உடனே, ஆனந்தப் பெருவெள்ளமான நல்லுலகை அடைந்தார். ஆகவே, அந்தணோத்தமர்களே! நீங்களும் இராமாயணத்தைக் கேளுங்கள். தொடர்ந்து ஒன்பது நாட்கள் கேட்பவன், எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான். அந்தணப் பெருந்தகையோர்களே! இந்த மகாகாவியத்தைக் கேட்டபின் கதையைச் சொன்னவரை நன்றாகப் போற்றிக் கௌரவிப்பவனிடம் திருமகள் நாயகரான மகாவிஷ்ணு மிகவும் பிரீதி அடைகிறார். அந்தணப் பெரியோர்களே! கதை சொல்லியவர் (கதை கேட்டவர் செய்த மரியாதைகளால்) திருப்தி அடைந்தாரேயானால், பிரும்மா-விஷ்ணு-ருத்ரன் ஆகிய மூவரும் திருப்தி அடைகிறார்கள். இதைப் பற்றி ஆலோசிக்க வேண்டியதேயில்லை.

இராமாயணக் கதையைச் சொன்னவருக்கு, (கேட்டவரின்) பொருளாதார நிலைக்குத்தக்கபடி பசுக்கள், ஆடைகள், பொன், மற்றும் இராமாயண நூல் முதலியவற்றைக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுப்பதனால் விளையும் நற்பலன்களைக் கூறுகிறேன், கேளுங்கள். நவக்கிரகங்களும், பூத-வேதாளங்களும் அவனை பாதிப்பதில்லை. இராமாயணத்தைக் கேட்டவனுக்கு எல்லா செல்வச் செழுமைகளும் வளர்கின்றன.

அவனை நெருப்பு பாதிப்பதில்லை; திருடர் முதலியோரிடமிருந்து அச்சம் ஏற்படுவதில்லை . இந்தப் பிறவியில் சம்பாதிக்கப்பட்ட பாவங்களிலிருந்து உடனே விடுபடுகிறான். அவன் தன் வாழ்வின் முடிவில், முந்தைய ஏழு தலைமுறையினருடன் மோட்சத்தை அடைகிறான். முன்னொரு காலத்தில், சனத்குமாரர் பக்தியுடன் கேட்டபோது, நாரதரால் சொல்லப்பட்ட விவரங்கள் அனைத்தையும் உங்களுக்குக் கூறினேன். இராமாயணம் என்ற ஆதிகாவியம், எல்லா வேதங்களின் பொருளுக்கும் ஏற்புடையது; எல்லாப் பாவங்களையும் நீக்கவல்லது புண்ணியம் தரக்கூடியது, எல்லாத துக்கங்களையும் அழிக்கவல்லது; எல்லாப் புண்ணியப் பலன்களையும் அளிப்பது; எல்லா வேள்விகளின் நற்பயன்களையும் கொடுக்கக் கூடியது. இராமாயணத்தின் ஒரு சுலோகம் அல்லது ஒரு வரியையேனும் படிக்கும் அறிஞர்கள் ஒருபோதும் பாவச்சிக்கலில் மாட்டிக் கொள்வதில்லை.

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

ஸ்ரீராமனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட இந்தப் புண்ணியக் காவியம், அடியார்களின் விருப்பங்களையெல்லாம் அருள்வது. எவர்கள் பக்தியுடன் இந்தக் காவியத்தைக் கேட்டு ஞானம் பெறுகிறார்களோ, அவர்கள் அடையும் புண்ணியங்களைக் கேள். அவர்கள், நூறு ஜன்மங்களில் செய்த பாவங்களிலிருந்து உடனேயே விடுதலை பெற்று, ஆயிரக்கணக்கான தலைமுறையினருடன் பரமபதத்தை அடைகிறார்கள்.

ஒவ்வொரு நாளும் இராம கதையை, இராம நாமத்தைக் கேட்டுக் கொண்டிருப்பவருக்கு. தீர்த்தயாத்திரை, கோதானம், தவம், வேள்வி ஆகியவைகளால் ஆவது என்ன? (அவைகளால் கிடைக்கக்கூடிய அத்தனை பயன்களையும், இராம நாம சங்கீர்த்தனத்தால் இவர்கள் அடைந்து விடுகிறார்கள்.) சைத்ரம், மாகம், கார்த்திகை மாதங்களில் ஒன்பது நாட்கள் இராமாயண அமுதப்பொழிவைக் கேட்க வேண்டும்.

இராமாயண காவியம், இராமனுடைய பேரருளைப் பெற்றுத்தரக் கூடியது; இராம பக்தியை வளர்ப்பது:எல்லாப் பாவங்களையும் அழிப்பது; எல்லாச் செல்வங்களையும் வளர்ப்பது. எவனொருவன், மன ஒருமைப்பாட்டுடன் இராமாயணத்தைக் கேட்கவோ, படிக்கவோ செய்கிறானோ, அவன் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபட்டு விஷ்ணுலோகத்தைச் சென்றடைகிறான்.

ஸ்ரீஸ்கந்தபுராணம். இராமாயண மாஹாத்ம்யம் என்ற பகுதியில் ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

(தொடரும்...)

ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாஸ்வாமிகள்,
ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விதுசேகர பாரதீ மஹாஸ்வாமிகள்
அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்